முருகப்பெருமான் துணை

**மகான் வியாசமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.01.2023, புதன்கிழமை

1. பிரம்ம சூட்சும பலம் கண்ட
பிரணவப்பிரியனின் அவதாரமே
சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அறிவிக்க சுபகிருது கலைதிங்கள்
வரங்களென லாபதிகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 11 ம் நாள் 25.01.2023, புதன்கிழமை)
வல்லமைபட அனுகூல ஆசியை
3. ஆசியை வியாசமுனிவர் யானும்
அறிவிப்பேன் உலகோர் நலமுற
வாசிவென்ற ஞானிகள் படை
வரமீந்து கலிவாழ் மக்களை
4. மக்களை மீட்கும் வண்ணமாக
மாதவசி அரங்கன் அவதார
ஆக்கம் அறிந்து இணைந்து
அனுகி பிரணவக் குடில் தன்னில்
5. தன்னில் சக்தியூட்டி இருக்க
தரணியோர் பாதுகாப்பு வேண்டி
எண்ணம் தூய்மை ஞானபலம்
எல்லாம் தருவாயென வேண்டி
6. வேண்டியே வணங்கி வர
விழாவாக முழுமதி காலம்
உண்டான ஞானிகளுக்கு பூசை
உயர்வாகச் செய்து வரம் தருக
7. தருகின்ற அவை நன்னாளில்
தவராஜன் வழி மற்றஞானிகளும்
அரூபமாக வரங்கள் தருவதால்
அகிலத்தார் அனுகி ஆசிபெற
8. ஆசிபெற அவரவர் தனக்கும்
ஆத்ம பிறவித் தொடர்புவழி
வாசி வென்ற ஞானிகள் இறங்கி
வரம் தந்து காப்பரப்பா
9. அப்பனே இந்தமகா சூட்சுமம்
அடைந்து அரங்கமகானை
ஒப்புகொண்டு வரும் மக்களுக்கு
ஒவ்வொரு முழுமதி பூசை தனிலும்

10. தன்னிலே படிப்படியாய் மாற்றம்
தன்வினை அகல அகலவே
நன்னயமாய் அஸ்டோத்ர முழுமதி
நம்பிக்கை வைத்து தொடர்ந்து வர

10. வருகவே ஞானபலம் தவதருமபலம்
வரமாகக் கிட்டி வளர்ச்சிகளோடு
முருகப்பெருமான் காட்சித் தயவு
முழுமைபட கண்டு பெரும்பேறு காண்பர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–